
சுதந்திரன்
SUTANTIRAN

வள்ளுவர் ஆண்டு 2009
ஆடி 21
ரம்ழான் பிறை 1
ஞாயிறு (6-8-1978)
நிறுவியது 1947
புத்தகம் 32
இதழ் 19

விலை சதம் 60



ஆவரங்காலில் நடைபெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணியின் இரண்டாவது தேசிய மாநாட்டில் பொங்குமாங் கடலெனத் திரண்டிருந்த மக்களிடையே தமிழர் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம், திருகோணமலைப் பா.உ. இரா சம்பந்தன், த. வி. கூ. தலைவர் திரு. மு. சிவசிதம்பரம் ஆகியோர் உணர்ச்சியுடன்உரையாற்றுகின்றனர். (படம் ஏ. வி. எம்.)

# தமிழீழ தேசியமன்றம் எப்போது அமையும்?

## அதை நிர்ணயிக்கவேண்டிய 21 பேரும் இவர்கள்தாம்!

தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு கடந்த பொதுத்தேர்தலில் தமிழ் மக்கள் வழங்கியுள்ள ஆணைப் பிரகாரம் தமிழ்ஈழத் தேசியமன்றத்தைக் கூட்டுவது எப்போது என்ற கேள்வியே ஆவரங் காலில் நடைபெற்ற கூட்டணியின் இரண்டாவது தேசிய மாநாட்டின்போது கடுமையான கருத்து மோதலை ஏற்படுத்தியதுடன் பிரச்சினைக்குரிய விஷயமாகவும் அமைந்திருந்தது.

தமிழ் ஈழத்தேசிய மன்றம் கூட்டப்பட்டு தமிழ் ஈழத் தின் அரசியலமைப்பு வரை யப்பட்டு தமிழ் ஈழ சுதந்தி ரப் பிரகடனம் நடைபெறத் தான் வேண்டும் என்பதை அனைவருமே ஏற்றுக் கொண் டார்கள். ஆனால் அதை எப் போது செயற்படுத்துவது என்பதிலேதான் கருத்து வேறுபாடு நிலவியது.

ஒரு காலக்கெடு விதிக்கப் பட்டு, ஒரு திகதி குறிப்பிடப் பட்டு, அத்திகதிக்குள் தமிழ் ஈழத்தேசிய மன்றம் நிறுவப் பட வேண்டும் என்பது ஒரு சாராரின்—குறிப்பாக இளை யோரின்கருத்தாகஇருந்தது.

அப்படியாக தீர்மானத் தில் திகதி குறிப்பிடுவது கூடாது; "தகுந்த நேரம்" என்று பொதுப்படையா கவே குறிப்பிடப்பட வேண் டும். அந்தத் "தகுந்த நேரம்" எது என்பதைத் தீர் மானிக்கும் பொறுப்பு கூட் டணியின் மத்திய செயற் குழுவிடமே விடப்பட வேண் டும் என்பது மூத்தோரின் கருத்தாக இருந்தது.

இறுதியில் "தக்க தருணத் தில்" தமிழ் ஈழத் தேசிய மன்றம் கூட்டப்பட வேண் டும் என்றும், அதற்கான நடவடிக்கைகளை கூட்டணி யின் மத்திய செயற்குழு மேற்கொள்ள வேண்டும் கூட்டணியின் அரசியல் மாநாடு மத்தியசெயற்குழு வுக்கு என்றும் கட்டளையிட் டுள்ளது.

"தக்கதருணம்" எதுவென் பதைத் தேர்ந்தெடுத்து, தமிழ் ஈழத்தேசிய மன்றத் தைக் கூட்டும் காத்திரமான பொறுப்பை ஏற்றுக்கொண் டிருக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் மத்திய செயற்குழுவில் 21பேர் அங் கம் வகிக்கிறார்கள். அந்த 21 பேருந்தான் தமிழ் ஈழத் தேசிய மன்றத்தைக் கூட் டும் நாளை நிர்ணயிக்க விருக் கிறார்கள். அந்த 'வரலாற் றுப் பெருமைக்குரிய செய லைச் செய்யப் போகிற அந்த 21 பேரும் இவர்கள் தாம்:-

1. மு. சிவசிதம்பரம் பா.உ.
2. அ. அமிர்தலிங்கம்பா.உ.
3. கி. கதிரவேற்பிள்ளை ,,
4. பண்டிதர் இரத்தினம் ,,
5. இரா. சம்பந்தன் பா.உ.
6. செ. இராசதுரை பா.உ.
7. காசி ஆனந்தன்
8. வண்ணை ஆனந்தன்,
9. மாவை சேனாதிராசா
10. ஈழவேந்தன்,
11. திருமதி அமிர்தலிங்கம்
12. தா. சிவசிதம்பரம்பா.உ.
13. த. இராசலிங்கம் பா.உ.
14. க. துரைரத்தினம்பா.உ.
15. அ. தங்கத்துரை
16. பொ.வி. வர்தையா
17. அ. குமரகுரு,
18. பி.எம். செபமாலை
19. நா.த. செல்லத்துரை
20. டாக்டர் உதுமாலெப்பை
21. பூ. கணேசலிங்கம்பா.உ.

தமிழ் ஈழத்தேசிய இனத்தின் விடுதலைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு குடும்பத்தவர்போல ஒன்றிணைந்து
# விடுதலைப் பாதையில் வீரநடைபோடுவோம்!

## உலகில் சுதந்திரம் கோரிப் போராடும்
## ஏனைய தேசிய இனங்களைப் போலவே
## நாமும்நமதுநாட்டைமீட்கப்போராடுகிறோம்
## கூட்டணி மாநாட்டில் சிவா தலைமையுரை!

இன்றைக்கு உலகத்திலே பல்வேறு நாடுகளில் ஒரு இனத்துக்குமேல் பல இனம் வாழ்கின்ற பொழுது, அந்தந்த இனம் சுயாட்சி பெறுவதற்கான முயற்சிகளில் ஈடுபடுகிறார்கள். உதாரணமாக ஆங்கில நாட்டை எடுத்துக்கொண்டால், ஸ்கொட்டிஸ் இன மக்களும், வேல்ஸ் இன மக்களும் தாங்கள் ஆங்கிலேயருடன் ஒப்பந்தத்தின் பேரில் இணைந்திருந்து. பிரிந்து போவதற்கான கிளர்ச்சிகளில் ஈடுபட்டிருந்தார்கள். ஆங்கில ஆட்சி இந்தப் பிரச்சினையை மனிதாபிமானத்துடன் அணுகி, அவர்களுடைய கோரிக்கையில் நியாயம் உண்டென்பதை உணர்ந்து ஸ்கொட்டிஸ் தேசத்திற்கும், வேல்ஸ் தேசத்துக்கும் ஒரு சட்டம் ஆக்கும் சபையை ஆக்கி, பல அதிகாரங்களை அந்தச்சபைக்கும் அந்தச் சபையினால் தெரிவு செய்யப்பட்ட நிர்வாகத்துக்கும் கொடுப்பதற்கான சட்டத்தைக் கொண்டு வந்திருக்கின்றன. ஆனால் ஸ்கொட்டிஸ் மக்கள் இந்த அதிகாரப்பரவல் பூரணத்துவம் பெற்றதல்ல என்று அந்தச் சட்டத்தை ஏற்க மறுக்கிறார்கள்,

அதே போல்தான் கனடா தேசத்திலே பிரெஞ்சு மக்கள் ஒரு சமஷ்டி ஆட்சியின் கீழ் இருந்துங்கூட அவர்களுடைய மொழியாகிய பிரெஞ்சு மொழிக்கு சரிசம அந்தஸ்து கொடுத்திருந்துங்கூட பிரெஞ்சு மக்கள் கூடுதலாக வாழும் குவிபெக் மாகாணத்தை தனியாட்சி ஆக்கவேண்டும் என்று முயற்சிக்கிறார்கள். அதே போல்தான் பிலிப்பைன்ஸ் தீவில் முஸ்லீம்மக்களும் இந்த ரீதியில் கிளர்ச்சி செய்கிறார்கள்.

ஆகையினால் நாம் நமது இனம் சுதந்திரமாக வாழ வேண்டும் என்று கேட்பது ஏதோ புதுமையான அல்லது உலக வழக்கத்துக்கு மாறானதோ அல்ல. இதை அரசாங்கமும் ஓரளவில் உணர்ந்திருக்கின்றது. என்பதற்கு அடையாளம், அவர்களுடைய மாவட்ட அமைச்சர் திட்டம்; ஆனால், இநதத் திட்டம் முற்று முற்றாக ஜனாதிபதியின் ஆதிக்கத்தின் கீழ் இயங்குகின்ற ஒரு திட்டமாக இருப்பதைத்தான் காண்கிறோம்.

உலகத்திலே மற்ற நாடுகளில் நடப்பவற்றைப் பார்த்து தமிழ் மக்கள் தங்கள் மறுக்க முடியாத சுயநிர்ணய உரிமையை பாவிப்பதற்கு அவர்களுடைய அரசியல் திட்டத்திலேயே தமிழ் மக்கள் மத்தியிலே குறிப்பிட்ட சர்வஜன வாக்கெடுப்பை இந்தக் கேள்விக்குத் தீர்ப்புக் காண்பதற்கு பாவிக்க வேண்டும் என்று அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

நாம் சுதந்திரத்தை விரும்கின்ற காரணத்தினால்தான் இன்றைக்கு பூரண சுதந்திரத்துக்காக, ஏகாதிபத்தியங்களுக்கு எதிராக நிறவெறி பிடித்தவர்களுக்கு எதிராக போராடுகின்ற மக்களுக்கு எங்கள் ஆதரவையும் ஆசியையும் கூறுகின்றோம். இன்றைக்கு உலகத்திலே இரண்டு அணி உண்டு. ஒன்று சுதந்திரத்துக்கும், சமத்துவத்திற்கும், சமதர்மத்திற்கும் போராடுகின்ற அணி. மற்றது ஏகாதிபத்தியத்திற்கும், நிறவெறிக்கும், அடிமைத்தனத்திற்கும் இயங்குகின்ற அணி. நாம் முதல் அணியைச் சேர்ந்தவர்கள் என்பதை திட்டவட்டமாகக் கூறிக்கொள்ள விரும்புகிறோம்.

நமது அரசியல்பணி நமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறியதுபோல தமிழீழ சுதந்திரத்தை நிலைநாட்டுவதற்கு சமாதான வழிகள் மூலமோ, நேரடிப் போராட்டம் மூலமோ, இயக்க மூலமோ நடவடிக்கை எடுப்பது இதற்கான திட்டங்களை காலத்திற்குக் காலம் நமது செயற்குழு தீட்டி அவைகளை செயல்படுத்துவதற்கு உங்கள் எல்லோரையும் அழைக்கிறோம்.

இந்த அரசியல் பணியை செய்கின்ற அதே நேரத்தில் தமிழ் ஈழத்தின் பொருளாதார வளர்ச்சியில் நமது இயக்கம் முழுப்பங்கு கொள்ள வேண்டும். இந்த அரசு, மக்கள் இதுவரை காலமும் அனுபவித்து வந்த சில சலுகைகளை நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்காக பறிக்கிறோம் என்று கூறுகிறார்கள். ஆனால் சென்ற ஒரு ஆண்டிலே எந்த விதமான ஆக்கபூர்வமான பொருளாதார வளர்ச்சியையும், நாட்டில் பொதுவாக, தமிழ் ஈழத்தில் விசேடமாக நாம் காணவில்லை. அவர்கள் தங்களுடைய முழுக் கவனத்தையும் சக்தியையும் மகாவலி அபிவிருத்தித் திட்டத்திலேயே செலுத்துகிறார்கள். இந்தத் திட்டத்தினால் எமக்கு அண்மையில் வரக்கூடிய நன்மை மிகவும் குறைவு.

இந்த அரசு தமிழ் ஈழத்தின பொருளாதாரத்தை வளர்க்காமல் விட்டது மாத்திரமல்ல, இருக்கும் பொருளாதாரத்தையே படிப்படியாக குன்றச்செய்வதைநாம் பார்க்கக்கூடியதாக இருக்கின்றது. மிளகாய், வெண்காயச் செய்கையினால் நமது விவசாயிகள் சென்ற ஆண்டுகளில் ஓரளவு சுபீட்சத்தைப் பெற்றார்கள். இன்று கட்டுப்பாடற்ற இறக்குமதியினால் இந்தப் பொருட்கள் விலை விழுந்ததன் காரணத்தினால் வெண்காயம், மிளகாய் செய்கையை கைவிடும்படியாக நேர்ந்து விட்டது. இந்த அரசை நம் விவசாயிகள் சார்பிலே கேட்டுக் கொள்வது, இறக்குமதியைத் தடை செய்யுங்கள், வெண்காயத்துக்கும், மிளகாய்க்கும் அவர்கள் உற்பத்தி செய்வதற்கான செலவுக்கு ஒப்ப நியாயமான விலை கொடுத்து வாங்கும்படியும் கேட்கிறோம். நமது விவசாயிகள் ஒரே பொருளை உற்பத்தி செய்கின்ற பழக்கத்தை விட்டு வெவ்வேறு பொருட்களை மாற்றி மாற்றிச் செய்கின்ற பழக்கத்தை மேற்கொள்ள வேண்டும் என்று அவர்களை கேட்டுக் கொள்கிறேன்.

இதைப்போல் தான் தொழிற் துறையைப் பொறுத்தவரையிலும் இந்த அரசாங்கத்தின் போக்கினால் பல தொல்லைகள் கைவிடப்படவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. இறக்குமதி செய்கின்ற சீனியின் விலை உயர்வாக இருந்த காரணத்தினால் நமது பகுதிகளில் கருப்பட்டி செய்கின்ற தொழிலில் பலர் வாழ முடிந்தது. இன்றைக்கு சீனியின் விலையைக் குறைத்த காரணத்தினால் இந்தத் தொழிற்சாலைகள் எல்லாம் மூடப்பட்டுவிட்டன. அரசினுடைய கொள்கை எதுவாக இருந்தாலும் நமது மக்கள் நமது பகுதிகளிலே உற்பத்தி செய்கின்ற பொருட்களை பாவிக்கின்ற பழக்கத்தை கூடுதலாகப் பழகிக் கொள்ள வேண்டும்.

மகாத்மாகாந்தியினுடைய அரசியல் தத்துவத்தின் ஒரு பகுதியாக தேசிய பொருட்கள் பாவிக்கின்ற இயக்கம் இருந்தது என்பதைநாம் அறிவோம். அந்த அடிப்படையில் நாமும் நமது அரசியல் இயக்கமும் ஒரு பகுதியாக நமது நாட்டில் உற்பத்தி செய்கின்ற பொருட்களைக் கூடுதலாகப் பாவிக்கின்ற பழக்கத்தை பழகிக்கொள்ள வேண்டும். நமது புது அமைப்பு விதிகளின்படி பொருளாதாரத்துக்குப் பொறுப்பாக எங்களுடைய சிரேஷ்ட தேசிய அரசுப் பேரவை உறுப்பினரும், பொருளாதாரத்தைப் பற்றி சிறப்பான சிந்தனைகளை உடையவருமான திரு. துரைரெத்தினம் அவர்களைச் செயலாளராக நியமித்துள்ளோம்.

நமது பொருளாதார வளர்ச்சியின் நோக்கமாக நிலத்தைப் பாதுகாப்பதும், உள்ளூர் உற்பத்தியை பெருக்குவதும் பின்தங்கிய சமூகத்தினருடைய நலனைப் பேணுவதும், உள்ளூர்ப் பொருட்களைக் கூடுதலாகப் பாவிப்பதும் நோக்கங்களாக இருக்க வேண்டும்.

எமது மூன்றுவது முக்கிய பணி சமூகத்திலே ஏற்றத் தாழ்வை அகற்றி சாதி வித்தியாசங்களை ஒழித்துமேலும் ஒற்றுமைப்பட்ட ஒரு இனத்தை உருவாக்குவது. [illegible] சமூகத்திலே ஊடுருவி இருக்கும் தீண்டாமை மூழுதாக ஒழிக்கப்பட வேண்டும். திரு. இராசலிங்கம் அவர்களை உடுப்பிட்டி தொகுதியில் வெற்றிபெறச் செய்ததன் மூலம் இதற்கு ஒரு நல்ல ஆரம்பமாக அமைந்தாலும், இன்னும் பல நாம் செய்ய வேண்டியிருக்கின்றது. இனத்தின் பேரால், உயர் சாதி மக்களை நான பணிவாக வேண்டுகிறேன். திறக்கப்படாத ஆலயங்களை திறந்து விடுங்கள். திறக்கப்படாத தேனீர்க்கடைகளைத் திறந்து விடுங்கள். எல்லாரும் நமது சகோதரர்கள் என்ற முறையிலே பழகுங்கள் என்று வேண்டுகிறேன். இப்பொழுது பல சிறுபான்மை மக்கள் தங்கள் சொந்தக் காணிகளில் வசியாமல் பிறர் காணிகளில் வசிப்பதை நாம் அறிவோம். காணி படைத்தவர்களை ஒரு பூமி தானம் செய்கின்ற ஒரு இயக்த்தில் பங்குகொள்ளுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நமது இனம் எத்தனையோ இன்னல்களுக்கிடையில் பல விதங்களில் புறக்கணிக்கப்பட்ட நிலையில் இன்னும் தலைநிமிர்ந்து வாழ்கின்றது என்றால் அது நமது கல்வியினால் தொடர்ந்தும் ஆசிரியர்களும், பெற்றோர்களும் நமது பிள்ளைகளுக்குச் சிறந்தகல்வி பயிற்றிக்கொடுக்க வேண்டும். மேலும் விரைவில் ஓர் பூரணத்துவம் வாய்ந்த பல்கலைக்கழகம் யாழ்ப்பாணத்தில் அமைய இருக்கின்றது. ஆனால், நாட்டின் மற்றப் பகுதிகளில் நடக்கின்ற பல்கலைக் கழகங்களுக்கு அரசு தாராளமாக உதவி செய்கின்ற நேரத்தில் நமது பல்கலைக்கழகத்தை மாற்றாந்தாய், மனப்பான்மையுடன் பார்க்கக்கூடும். இந்தப் பல்கலைக்கழகம் சிறப்பாக இயங்குவதற்கு, தரத்தில் வேறு எந்தப் பல்கலைக்கழகத்துக்கும் இழைக்காது இயக்க வேண்டும் என்றால் பொது மக்கள் பூரண ஆதரவை இந்தப் பல்கலைக்கழகத்துக்குக் கொடுக்க வேண்டும். பல்கலைக்கழகத்தில் பயில வருகின்ற பிள்ளைகளில் விசேடமாக திருமலை, மலையகம் போன்ற இடங்களில் இருந்து வருகின்ற பிள்ளைகளுக்கு யாழ்ப்பாணத்திலும், தூரப் பிரதேசங்களில் இருந்து வருகின்ற பிள்ளைகளுக்கு பல்கலைக்கழக சூழ்நிலையில் வாழ்கின்ற பெரியார்கள் நியாயமான வாடகைக்கு வீடுகள் கொடுத்து உதவவேண்டும். எல்லாத் தர்மங்களிலும் கல்வித் தர்மம் சிறந்தது என்று கூறப்படுகின்றது. பணம் படைத்த தமிழ் மக்களை பல்கலைக்கழகத்திற்குத் தாராளமாக பண உதவி செய்யுமாறு கேட்கின்றேன்.

அதேபோல் நல்லதொரு சிறந்த நூல் நிலையத்தை ஆக்குவதற்குஉபயோகமான நூல்களை கொடுத்துதவுமாறு கேட்கிறேன்.

இப்படியாக எல்லா முனைகளிலும் தமிழ் இனத்தை முன்னேற்றப் பாதையில் இட்டுச் செல்ல தமிழர் விடுதலைக்கூட்டணி முனைந்திருக்கின்றது. காலத்துக்குக் காலம் தமிழ் மக்களை இன்னும் ஆயிரமாயிரமாக அங்கத்தவர்களாகச் சேரும்படி வேண்டுகிறோம். காலத்துக்குக் காலம் நாம் ஆரம்பிக்கின்ற இயக்கங்களில் சேருமாறு வேண்டுகிறோம். தென் இலங்கையில் வாழும் முற்போக்குச் சக்திகளை தமிழ் தேசிய இனத்தின் அபிலாசைகளை அங்கீகரித்து அவற்றுக்கு அனுதாபமாக இயங்க வேண்டும் என்று கேட்கின்றோம். உலக அரங்கிலே சுதந்தரத்தை ஆதரிக்கும் சக்திகளை நமக்கு அனுதாபமாக இயங்கவேண்டுகிறோம்.

இன்றைக்கு தமிழீழத்தின் சிறந்த பிள்ளைகள் உலகத்தின் பல்வேறு நாடுகளில் வசிக்கிறார்கள். அவர், கள் எல்லோரும் நமது இயக்கத்தில், அக்கறை கொண்டவர்களாக உலகத்தின் கவனத்தை நமது இயக்கத்தின் மேல் ஈர்ப்பதற்கு பல அரிய தொண்டுகளைச் செய்து வருகின்றார்கள், இலண்டன் நகரத்திலும், நியூயோர்க், வாஷிங்டன், ஜேர்மனி போன்ற நகரங்களிலும் நமது சகோதர சகோதரிகள் பல பிரசாரங்களை மேற்கொண்டுள்ளார்கள். அண்மையில் இலண்டன் சென்ற ஒரு உதவி அமைச்சர் நமது இளைஞர்களுடைய பிரசாரத் தாக்கத்தை, தாங்கமுடியாது என்று வருந்தினார். இவைகளைப் பாராட்டுகின்ற அதே வேளையில் நீங்கள் தொடர்ந்தும் பல பணிகள் செய்ய சந்தர்ப்பங்கள் பல வரும் என்று கூறவிரும்புகிறேன்,

நமது இனத்தின் சரித்திரத்தில் ஒரு முக்கிய கட்டத்தில் இந்த மாநாடு நடைபெறுகின்றது. தமிழர் விடுதலைக் கூட்டணியின் மூலம் நாம் கண்ட ஒற்றுமை அரசைச் சிந்திக்க வைக்கின்றது. நமது நாடாளுமன்றக்குழு நாடாளுமன்றத்தில் இயங்கிய விதத்தினால் மக்களுடைய நன்மதிப்பைப் பெற்றுள்ளது. இவைகள் எல்லாம் சாதகமாக இருந்தாலும் நாம் செல்லவேண்டிய வழி நெடுந்தூரமாகும். ஆனால் நாம் ஓர் குடும்பத்தவர்களைப்போல் ஒன்றிணைந்து சிந்தித்துச் செயலாற்றுவோமேயானால் அந்த வழியைத் தாண்டி நாளை உதய சூரியன் உதிப்பது திண்ணம் போல, நாமும் நமது இலட்சியமாகிய சுதந்திரத் தமிழீழத்தை அடைவது திண்ணம் என்று கூறி; பெருந்தலைவர்கள் வகித்த பதவியில் சிறியேனை அமர்த்தியதற்காக உங்களுக்கு நன்றி கூறி அந்தத் தலைவர்கள் செய்த பணியின் ஒரு சிறு பங்கையாவது நான் செய்வதற்கு சக்தியும், மனத் திடமும் எனக்குக் கிடைக்க வேண்டும் என்று பிரார்த்தித்து எனது பேருரையை முடிக்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆவரங்கால் மாநாடு விடுத்துள்ள அறைகூவல்

அன்பு நண்பா,

நாமெல்லாம் ஓர் குடும்பம் — இந்த
நலமிக்க வார்த்தையில் தான் என்ன இன்பம்?

என்றான் புதுவைக் கவிஞன் பாரதிதாசன். அவனது இக்கவிதை வரிகளுக்கு இலக்கணமாக அமைந்து—தமிழினத்தின் ஒற்றுமை முரசொலித்து, விடுதலைப் பேரிகை முழக்கி; தமிழ் சமுதாயத்துக்கு மேலும் எழுச்சியையும் உற்சாகத்தையும், உறுதியையும் தந்து, உதிரத்தில் சூடேற்றி, நரம்புகளில் முறுக்கேற்றி, சுதந்திரப்பாதையில் தொடர்ந்து முன்னேறிட ஆணையிட்டிருக்கிறது — கொள்கைக் குன்றும் கோப்பாய்க் கோமான் அமரர் வன்னியனாரின் மண்ணில் யூலை 29 30ல் நடந்து முடிந்துள்ள தமிழர் விடுதலைக்கூட்டணியின் இரண்டாவது தேசிய மாநாடு!

ஆம்; ஆவரங்கால் மாநாட்டின் போது தமிழ் ஈழம் முழுவதுமே அங்கு ஒன்று திரண்டு நின்றதைக் கண்டேன்; தமிழ் ஈழம் மட்டுமா? மலையகமும் அங்கு கொஞ்சி விளையாடியதைக் கண்டேன். மீன்பாடும் தேனாடும், வளங் கொழித்திடும் வன்னியும், கோணேசர் மண்ணும், கோலமிகு மன்னாரும், முன்வைத்த காலைப் பின் வைக்கா முல்லைத்தீவும், கடமை தவறுக்கல்முனையும், புதிய தமிழகத்துடன் இணைபத்துடித்திடும் புத்தளமும், நிலைகுலையா மலையகமும் யாழ் மண்ணோடு இணைந்து பிணைந்து உள்ளத்தால் ஒன்றுபட்டு ஆவரங்காலில் நின்றதைக்கண்டபோது—அங்கே தமிழ்ஈழமே மலர்ந்ததைக்கண்டேன்; களிபேருவகை கொண்டேன்.

நீரடித்து நீர் பிரியாது என்பார்கள்; அதுபோல தமிழ் பேசும் மக்களுக்குள்ளே—தமிழர் விடுதலைக் கூட்டணிக்குள்ளே — என்னதான் சிறுசிறு கருத்து வேறுபாடுகள், சலசலப்புக்கள் ஏற்பட்டாலும் கூட—கூட்டணியின் ஒற்றுமையை—தமிழ் சமுதாயத்தின் ஒற்றுமையை — யாராலும் எக்காலத்திலும் பிரித்து விட முடியாதென்பதை ஆவரங்கால் மாநாடு மீண்டும் ஒரு முறை உறுதிப்படுத்தி விட்டது.

நண்பா, விடுதலை இயக்கம் இன்னும் வேகமாக இயங்கிட வேண்டும்; தமிழீழ சுதந்திரப் பிரகடனம் ஒரு குறிப்பிட்ட கால எல்லைக்குள் நடைபெற வேண்டும்; போராட்டம் உடனே ஆரம்பமாக வேண்டும் என்றெல்லாம் இனத்தின் உயிர் மூச்சாக விளங்குகிற இளைஞர்கள் அரசியல் மாநாட்டின் போது கொஞ்சம் அளவுக்கதிகமாகவே வலியுறுத்தியது, வற்புறுத்தியது உண்மைதான். இது எவ்வகையிலும் இயக்கத்துக்கும் — இயக்கத்தலைவனுக்கும் பெருமை தருவதே தவிர இழுக்குத்தரக்கூடியதல்லவே!

போருக்கு நாள்குறித்தோம்; போராட ஆளில்லை என்றால்தான் ஒரு இயக்கத்துக்கு இழுக்கு; போராட நாம் தயார், இன்னும் தலைவன் ஆணையிடுகிறான் இல்லையே என்று உள்ளம் குமுறுகிற வீர இளைஞர்களை ஒரு இயக்கம் கொண்டிருக்குமானால், அந்த இயக்கத்துக்கும் இயக்கத் தலைவனுக்கும் அது பெருமையளிப்பதாகுமேதவிர சிறுமையளிப்பதாகாது.

தமிழர் விடுதலைக் கூட்டணியைப் பொறுத்தவரை, விடுதலைப் போராட்டத்தில் விரைந்துகுதித்திடத்துடித்து நிற்கும் வீர இளைஞர்களுக்கு எந்நாளும் பஞ்சமில்லை; அவர்களுடைய துடிப்பை, நிதானம், கட்டுப்பாடு, அன்பு எனும் அங்குசங்களால் நெறிப்படுத்தி இயக்கத்தை வழிப்படுத்திச் செல்லும் ஆற்றல் பெற்ற தலைவராக திரு. அமிர்தலிங்கம் அவர்களே திகழுகிறார் என்பதையும் ஆவரங்கால் மாநாடு மீண்டும் ஒரு முறை எடுத்துக்காட்டிவிட்டது.

நண்பா, தமிழினத்தின் சுதந்திர எழுச்சிக்கு — தமிழீழக்கோரிக்கைக்கு விடப்பட்ட ஒரு பயமுறுத்தலாக ஒரு மிரட்டலாக—1977 ஆவணியில் அப்பாவித் தமிழ் மக்கள் மீது சிங்கள வெறியர்களால் கட்டவிழ்த்துவிடப்பட்ட மிலேச்சத்தனமான இனக்கொலை நடந்து முடிந்த பின்னர், அந்த இனவெறிக்கொடுமையின் வடுக்கள் இன்னும் இதயத்தை விட்டகலாத நேரத்தில், ஆவரங்காலில் கூடிய கூட்டணி மாநாடு, சுதந்திரத் தமிழீழ இலட்சியத்தை அடைவதில் தனக்குள்ள அழுத்தமான உறுதியையும், பிடிவாதத்தையும் தெளிவாக்கியிருப்பது — சுதந்திரத்தை நாடி நிற்கும் ஓர் மக்கள் கூட்டத்தின் உணர்ச்சியை திட்டமிட்ட காடைத்தனத்தினால் அழித்து விடமுடியாதென்பதை உலகுக்கு எடுத்துணர்த்துகிறது.

அதுவும், ஒற்றையாட்சி அரசியலமைப்புக்கு எதிராக வாய்திறந்தால் பத்தாண்டுச் சிறை, சொத்துப்பறிமுதல் என்பன போன்ற பாஸிசச் சட்டங்கள் பாயத்தயாராக இருக்கின்ற வேளையில் அந்தப்பயங்கரச்சட்டங்களையெல்லாம் சந்திக்கத்தயாரென அரசுக்கு அறைகூவல் விடுத்திருக்கிறது ஆவரங்கால் மாநாடு!

1977 ஆடிப்பொதுத்தேர்தலுக்குப் பின்னர் கடந்த ஓராண்டாக தமிழினத்துக்கு எதிராக நடைபெற்ற நிகழ்ச்சிகள் அனைத்தும்—சுதந்திரத் தமிழ் ஈழ அரசை மீள்வித்து புனரமைத்தே தீரவேண்டும் என்ற தமிழ் மக்களின் நிலையை மேலும் உறுதிப்படுத்தி விட்டன; எனவே தமிழ் ஈழ சுதந்திரத்தை நிலைநாட்டும் நடவடிக்கைகளை தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறிய பிரகாரம் தமிழர் விடுதலைக் கூட்டணி மேற்கொள்ள வேண்டும்—

சரியான சமயத்தில் தமிழீழத் தேசிய மன்றத்தைக்கூட்டித்தமிழீழத்துக்கென தனியான அரசியல் யாப்பை உருவாக்கி. தமிழீழத்தை ஒரு சுதந்திர அரசாகப் பிரகடனப்படுத்த வேண்டும்—




தமிழ்அகதிகள் தொண்டர் அணியொன்று உருவாக்கப்பட்டு, அந்த அணி மூலம் தமிழ் ஈழ மண்—தமிழ் ஈழ எல்லைப்புறப் பிரதேசங்கள் பாதுகாக்கப்பட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இந்த அணியில் ஆயிரமாயிரமாக செய் அல்லது செத்துமடி என்ற உணர்வுகொண்ட இளைஞர்களும் இளம் பெண்களும் திரள வேண்டும்—

உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் வாழுகிற தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் தங்கள் மாத வருமானத்தின் ஒரு வீதத்தை தமிழீழ மண்ணைக்காப்பதற்கும், தமிழ் அகதிகளுக்கு மறு வாழ்வளித்திடவும் தவறாது வழங்கிட வேண்டும்—

தமிழினத்தின் சாபத்தீடாக விளங்கும் சாதி வேறுபாடுகளையும் தீண்டாமையையும் தமிழீழத்திலிருந்து காந்தி பிறந்த நாளான அக்டோபர் 2ம் திகதிக்குள் அறவே ஒழித்துக்கட்ட வேண்டும்; செப்டம்பர் மாதம் முழுவதும் தீண்டாமை யொழிப்பு மாதமாக பிரகடனப்படுத்தப்பட வேண்டும்.

என்கிற திட்டங்களை — அறை கூவல்களை முன் வைத்திருக்கிறது ஆவரங்கால் மாநாடு.

செயல் எங்கே செயல் எங்கே என்று கேட்கும் செந்தமிழ்க்காளைகளை தமிழ் மண்காக்க அழைக்கிறது ஆவரங்கால் மாநாடு! சுவர் இருந்தால்தான் சித்திரம் எழுதலாம் மண் காக்கப்பட்டால்தான் அங்கே சுதந்திர தமிழ் ஈழ அரசு நிறுவலாம்! எனவே தமிழ் மண் காக்கும் போராட்டத்தை முதலிலே தொடங்குவோம் வருகவென வாலிபர்க்கு அழைப்பு விடுத்திருக்கிறது கூட்டணி மாநாடு.

நண்பர் ஈழவேந்தன் எழுதிய நூலொன்றுக்கு முன்பு ஒரு நாள் 'தமிழ் மண்காப்போம்— தாயகம் மீட்போம்' என்று தலைப்பிட்டுக் கொடுத்திருந்தேன். இன்றைக்கு ஆவரங்கால் மாநாடு தந்திருக்கும் செய்தியும் இதே தான்.

முதலில் தமிழ் மண்ணைக்காக்கும் நடவடிக்கையில் இறங்குவோம்—தமிழ் மண்ணைக்காக்கும் நடவடிக்கையிலிறங்கிக் கொண்டே தாயகம் மீட்கும் புனிதப் பணியையும் கவனிப்போம்; தமிழ் மண் காக்கப்பட்டால்தான், தாயகம் மீட்கப்பட முடியும் என்பதை நெஞ்சிலிருத்தி செயலில் இறங்குவோம்!

சினிமாப்பார்ப்பதையும், சுவரில் எழுதுவதையும், கோஷங்கள் எழுப்புவதையும், திண்ணைக்குத் திண்ணை, சந்திக்குச் சந்தி நின்று மற்றவர்களைக் குறை கூறிப் பொழுது போக்குவதையும் நமது இளைஞர்கள் கைவிட்டு, நகர வாழ்க்கையின் சுகத்தைத்துறந்து கிராமப் புறங்களுக்கு— காடுகளுக்குச் சென்றுகுடியேறி தமிழ் மண்ணைக்காக்கவும், அவ்வாறு குடியேறும் தமிழ் அகதிகளுக்கு தொண்டாற்றவும் தமிழ் அகதிகள் தொண்டர் அணியில் ஆயிரமாயிரமாகச் சேரவேண்டும்.

இன விடுதலைப் போராட்டமென்பது கோஷங்கள் எழுப்புவதும், சுவரில் எழுதுவதும், பா.உ.க்களை கிண்டல் செய்து தாக்கிக் கொண்டேயிருப்பதும் அல்ல; மற்றவர்களை நீங்கள் என்ன செய்தீர்கள் என்று கேட்பதற்கு முன்பு, ஒவ்வொரு தமிழ் இளைஞனும் நாட்டுக்காக— என் தமிழ் ஈழ மண்ணைக்காப்பதற்காக— நான் என்ன செய்தேன் என்ற கேள்வியைத் தனக்குத்தானே கேட்டுப்பார்க்க வேண்டும்.

ஆயுதமெடுத்து எதிரியைக்களத்தில் சுட்டு வீழ்த்துவது மட்டும் விடுதலைப் போராட்டமல்ல— தாயக மண்ணைக்காப்பதற்காக தமது வசதி நிறைந்த வாழ்க்கையைத் துறந்து மண்வெட்டி பிடித்து காடுகளை வெட்டி களனியாக்கி நிலம் பேணுவதும் போராட்டம் தான்! இதை நமது இளைய சமுதாயம் உணர வேண்டும்!

புரையோடிப்போயிருக்கும் தீண்டாமைக் கொடுமையை ஒழித்துக்கட்டும் புனிதப்பணியில் முழுநேரமாக ஈடுபடுவதும் விடுதலை இயக்கத்தின் முக்கிய அம்சம்தான்!

எனவேதான் ஆவரங்கால் மாநாடு அறிவித்திருக்கும் திட்டங்களை துரிதமாகச் செயற்படுத்தும் பணியில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் மத்தியசெயற்குழுவும், பொதுச்சபையும், தமிழ் இளைஞர்களும், இளம் பெண்களும் உள்ளத் தூய்மையுடன் தாமதமின்றி ஈடுபட வேண்டும்,

தமிழ் மண்காப்போம்; தாயகம் மீட்போம்; தமிழ் ஈழக் கோரிக்கை தடை செய்யப்பட்டால், அத்தடையை உடைத்தெறிவோம்; எந்தநிலையிலும் தமிழ் ஈழக் கோரிக்கையிலிருந்து விலகியோட மாட்டோம்; விட்டுக்கொடுக்க மாட்டோம்; அதனால் வரக்கூடிய எந்த விளைவுகளையும் சந்திப்போம் அரசின் சவாலை ஏற்போம் என்பதே ஆவரங்கால் மாநாடு விடுத்துள்ள அறை கூவலாகும்,

உன் அன்புத் தோழன்

கோவை-மகேசன்,

## கூட்டணி மாநாட்டில் அமெரிக்க பிரமுகர்கள்!

ஆவரங்காலில் நடைபெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணியின் இரண்டாவது தேசிய மாநாட்டில் இலங்கையிலுள்ள அமெரிக்க தூதரகத்தைச் சேர்ந்த முதலாவது செயலாளர் திரு. டி. போல். அவரது உதவியாளர் திரு. சந்திரே ஆகியோர் பார்வையாளர்களாகக் கலந்து கொண்டனர். மாநாட்டில் தலைவர்கள் ஆற்றிய உரைகளை இவர்களுக்கு செந்தமிழர் இயக்கச் செயலாளர் திரு. வி, பொன்னம்பலம் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துக் கூறி விளக்கம் அளித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணைந்துவாழ மார்க்கமேயில்லை

# தமிழீழம் பிரிந்தே தீரவேண்டும்'

**ஆவரங்காலில் 30-7-78ல் நடைபெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணியின் இரண்டாவது தேசிய மாநாட்டில் கூட்டணியின் செயலதிபர் திரு. அ. அமிர்தலிங்கம் பா. உ. அவர்களால் முன்மொழியப்பட்டு, திருகோணமலை பா. உ. இரா. சம்பந்தனுல் வழிமொழியப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட அரசியல் தீர்மானம் வருமாறு:-**

## தமிழ் மண்ணைக் காப்பதற்கு தொண்டரணியில் சேருங்கள்!

## ஆவரங்கால் மாநாட்டு அரசியல் தீர்மானம்!

இலங்கைவாழ் தமிழ்மக்கள் மொழியால், மதங்களால், கலாச்சார பாரம்பரியங்களால், தனியான பிரதேசத்தில் சுதந்திர அரசாக வாழ்ந்த வரலாற்ருல், தொடர்ந்தும் தனியினமாக வாழ்ந்து தம்மைத்தாமே ஆளும் உள்ள உறுதியால், சிங்கள இனத்தில் இருந்தும் வேறுபட்ட ஓர் தனித்தேசிய இனம் என்று 1976ம் ஆண்டு மே 14ம் திகதி வட்டுக்கோட்டையில் கூடிய தமிழர் விடுதலைக் கூட்டணியின் முதலாவது மாநில மாநாடு பிரகடனப்படுத்திய படியினுலும்.

ஒவ்வொரு தேசிய இனத்திற்கும் உரித்தான சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் ஓர் சுதந்திர, இறைமையுள்ள, மதச்சார்பற்ற, சோசலிச தமிழீழ அரசை மீள்வித்து, புனரமைப்புச் செய்வது, இந்நாட்டுத்தமிழ் தேசிய இனத்தின் நிலையான வாழ்வைப் பாதுகாப்பதற்கு, தவிர்க்கமுடியாததாகிவிட்டதென்று, அம்மாநாடுமேலும் தீர்மானித்தபடியாலும்,

1977ம் ஆண்டு ஆடி 21ம் திகதி நடைபெற்ற பொதுத்தேர்தலில் இத்தீர்மானத்தின் அடிப்படையில் "இந்நாட்டில் தமிழ்பேசும் மக்கள் பாரம்பரியமாக வாழும் தொடர்பான பிரதேசம் முழுவதையும் உள்ளடக்கியதான ஓர் சுதந்திர இறைமையுள்ள, மதசார்பற்ற, சமதர்ம தமிழீழ அரசை நிறுவுவதற்கு தமிழ் தேசிய இனத்தின் கட்டளையை தமிழர் விடுதலைக் கூட்டணி நாடி" நின்றபடியினுலும்,

தமிழீழத்தில் தமிழர் விடுதலைக்கூட்டணி போட்டியிட்ட இருபத்து மூன்று தேர்தல் தொகுதிகளில் பதினெட்டுத் தொகுதிகளில் கூட்டணி வேட்பாளர்களை மிக அதிகப்படியான வாக்குகளால் வெற்றிபெறச்செய்து தமிழீழத் தேசிய இனம் தமிழீழ அரசை நிறுவுவதே தன் சுயநிர்ணயம் என்பதைத் தெளிவாகக் காட்டிவிட்டபடியாலும்,

அத்தேர்தலின்பின்.

(அ) ஆட்சிபீடத்தின் காவற்படைகளாலும், சிங்கள இனவெறியர்களாலும், 1977ம் ஆண்டு ஆவணி மாதம் திட்டமிட்டுத் தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட இனக்கொலை நடவடிக்கைகளான கொலை கொள்ளை, கற்பழிப்பு, படுகாயம், தீயிடல் முதலிய மனிதாபிமானமற்ற வன்செயல்களும்,

(ஆ) இச்செயல்களாலும், தொடர்ந்து நடைபெற்று வரும் தமிழினத்துக்கெதிரான பயமுறுத்தல் சம்பவங்களாலும், சிங்களப் பிரதேசத்தில் தமிழ் மக்கள் இனியும் வாழ்வது சாத்தியமற்றதாகிவிட்ட நிலையும்.

(இ) சிங்கள மக்கள் மத்தியில் பல்லாண்டு காலம் வாழ்ந்த தமிழ் மக்களும் தம் உடமையெல்லாம் இழந்து பல்லாயிரக்கணக்கில் தமிழீழத்துக்கு அகதிகளாக வந்தநிலையும்.

(ஈ) இந்நிகழ்ச்சிகளின் பின்னும் இலங்கை அரசும், சிங்களத்தலைமையும், இந்நிலைக்கான அடிப்படைப் பரிகாரத்தைக்காணவேண்டுமென்றசிந்தனை சிறிதுமின்றி தேசிய அரசுப்பேரவையில் இப்போது சமர்ப்பித்திருக்கும் அரசியல் அமைப்பில் தமிழ் மொழிக்கு ஒரு சில உரிமைகளை மாத்திரம்கொடுத்து சிங்களத்தை மட்டுமே ஆட்சிமொழியாகக்கொண்ட பௌத்த மதத்திற்கு முதலிடம் அளிக்கின்ற ஒற்றையாட்சி ஆட்சி அரசை நிறுவதற்கே வழிவகுத்திருப்பதும்.

(உ) தமிழ் தேசிய இனத்தின் பாரம்பரியமான தாயகத்தை ஏற்றுக்கொள்ள மறுத்தும், அதன் இறைமையையும்; சுயநிர்ணய உரிமையையுமே ஆட்சிப்பீடம் நிராகரிக்கும் நிலையும்,

இத்தீவில் இரண்டு தேசிய இனங்களும் இணைந்து வாழ்வதற்கு எவ்வித மார்க்கமுமில்லை என்பதை உறுதிப்படுத்துவதாலும்,

1978ம் ஆண்டு ஆடி 30ம் திகதி ஆவரங்காலில் கூடியிருக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் இரண்டாவது மாநில மாநாடு கூட்டணியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறிய பிரகாரம். தமிழீழ சுதந்திரத்தை நிலைநாட்டுவதற்கு சமாதான வழிகள் மூலமோ, நேரடிப் போராட்டங்கள்மூலமோ, இயக்கமூலமோ நடவடிக்கை எடுக்கத் தீர்மானிக்கின்றது.

விடுதலை நடவடிக்கையின் ஓர் அங்கமாக ஆவணி இனக்கொலைக்குத்தப்பி தமிழீழம் வந்த மக்களை, தமிழீழத்தில் நிலையாக வாழ வைப்பதற்கும், சிங்களப் பிரதேசங்களில் இருந்து, நிர்ப்பந்தங்களாலும் பயமுறுத்தல்களாலும் வெளியேறும் தமிழ் மக்களைத் தமிழீழத்தில் குடியமர்த்துவதற்கும், இனவெறியர்களின் தாக்குதல்களினுல் பாதிப்புக்குள்ளான தமிழீழப் பிரதேசங்களைப் பாதுகாப்பதற்கும் இலங்கையிலும் வெளிநாடுகளிலும் வாழும் தமிழீழ மக்கள் எல்லோரையும் தமது வருமானத்தில் ஒரு வீதத்தைத் தவருது அளிக்க முன்வருமாறு இம்மாநிலமாநாடு கோருகின்றது.

தாயகத்தின் பாதுகாப்பே தமிழீழத்தின் முதற்பணி என்பதை உணர்ந்து எமது நாட்டிற்கு அகதிகளாக வரும் தமிழ் சகோதரர்களுக்கு சேவை செய்வதற்கும், தமிழ் மண்ணைக் காப்பதற்கும், எந்தத் தியாகத்திற்கும் தயாரான தொண்டர்களைக் கொண்ட தமிழ் அகதிகள் தொண்டர் அணியில் ஆயிரக்கணக்கில் சேருமாறு ஆற்றலுள்ள தமிழ் இளைஞர்களையும், இளம் பெண்களையும் இம்மாநாடு அழைக்கின்றது.

தமிழீழ விடுதலையைக் காண்பதற்கு சர்வதேச ஆதரவை திரட்டுவதற்கு துரித நடவடிக்கை எடுக்குமாறும், தக்க நேரத்தில் தமிழீழத் தேசிய மன்றத்தை அமைத்து தமிழீழத்திற்கு ஒரு அரசியலமைப்பை ஆக்கி அதை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறும் மத்திய செயற்குழுவுக்கு இம்மாநாடு பணிக்கின்றது.

# Resolution Adopted at the T. U. L. F. 2nd National Convention Held at Avarangal on July 30th 1978

Whereas the first National Convention of the Tamil United Liberation Front meeting at Pannakam on the 14th day of May 1976 declared that the Tamils of Ceylon by virtue of their language, their religions, their history of independent existence, as a separate state over a distinct territory were separate Nation distinct from the Sinhalese.

And whereas the same convention, resolved that the restoration and reconstitution of the free, sovereign secular, socialist state of Tamil Eelam based on the rights of self determination inherent to every nation has become inevitable.

And whereas, at the General Elections held on 21st July 1977 the Tamil United Liberation Front sought, the mandate of the Tamil Nation to establish an independent, sovereign secular socialist state of Tamil Eelam, that includes all the geographically contiguous areas that has been the traditional homeland of the Tamil speaking people in their Country.

And whereas the Tamil Nation. demonstrated unmistakably that it has excercised its right of self determination to establish the state of Tamil Eelam by returning with preponderant majorities 18 of the 23 candidates fielded in Tamil Eelam,

And whereas, after the elections

(a) in August 1977, the armed services of the Government and Sinhalese communal fanatics unleased planned inhuman violence involving acts of murder, looting, rape, grievous hurt and arson amounting to genocide, on the Tamil people

(b) due to these acts and continuing acts of intimidation, directed against the Tamil people it has become impossible for the Tamil people to live in the Sinhalese areas.

(c) even Tamil people who have lived among the Sinhalese for generations were forced to flee to Tamil Eelam in their thousands as refugees having lost all their belongings.

(d) even after all these events, the Government of Sri Lanka and the Sinhalese leadership have, in the draft constitution presented before the National State Assembly, imposed on the country a unitary constitution under which while a few rights are given to the Tamil Language, Sinhalese is ensrined as the official language and pride of place is given to Budhism. without the slightest recognition of the need to find a fundamental solution to this situation,

(e) The Government has refused to recognise the traditional homeland of Tamil Nation and has rejected their right to sovereignty and self determination. It is established beyond any doubt that there is no way for the two Nations in this Island to live together in one state.

The second National Convention of the Tamil United Liberation Front assembled at Avarangal on this 30th day of July 1978 resolves "to establish the independence of Tamil Eelam by peaceful means or by direct action or struggle" as announced in its election manifesto.

This National Convention further calls all sons of Tamil Eelam, living in this Island and abroad to contribute one percent of their income to finance the rehabiltation of the Tamil people who fled to Tamil Eelam escaping the horrors of the August genocide, for the settlement in Tamil Eelam, of Tamils who are being disloged by threats and compulsion from their homes in the Sinhalese areas, for the protection of areas of Tamil Eelam, ravaged by attacks by racial extremists, as part of their moment for liberation.

This convention further calls upon able bodied Tamil young men and women to realise that the preservation of their homeland is their prime duty and to join in their thousands, as Tamil refugees service volunteer, and be prepared to sacrifice everything in the service of Tamil Brothers who have come as refugees to our territory and to safeguard the Tamil Soil.

This convention directs the central working committee, to take immediate action, to enlist international support to achieve the freedom of Tamil Eelam, and at the appropriate time to convene a National State Assembly of Tamil Eelam to draft a Constitution for the state of Tamil Eelam and to bring it into operation.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சலுகைகளை நிராகரிக்கும்படி தீவிரவாதிகள் வலியுறுத்து!

## கூட்டணி மாநாடு பற்றி 'சென்னை இந்து'

கடந்த வார இறுதியில் நடைபெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணியின் தேசிய மாநாட்டில் உரையாற்றிய த.வி.கூ. தலைவர் திரு. மு. சிவசிதம்பரம், அரசாங்கம் தமிழர்களுக்கென தனிநாடு அமைப்பது பற்றி கருத்தில் கொள்ளாமையால், தாம் புதிய அரசியலமைப்பு விவாதத்தில் கலந்து கொள்ளப் போவதில்லை எனத் திட்டவட்டமாகக் கூறினர்.

"தமிழர் விடுதலைக் கூட்டணியினர் "தமிழ் ஈழம் அமைப்போம்" என்ற கோரிக்கையை முன் வைத்துப் போட்டியிட்டே கடந்த பொதுத்தேர்தலில் வெற்றி பெற்றனர் என்பது உண்மையே'

தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஒரு பகுதியினர் அரசாங்கம் வழங்கும் சலுகைகளை ஏற்று அரசாங்கத்துடன் பூரணமாக ஒத்துழைப்பதென்ற எண்ணத்தைக் கொண்டுள்ளனர்.

இதே சமயம், கூட்டணியின் தீவிரவாத இளைஞர்கள் இச்சலுகைகளை முற்றாக நிராகரிக்க வேண்டுமென்று திட்டவட்டமாகக் கூறி வருகின்றனர்.

தமிழ் ஈழம் அமைக்கும் வரை தமிழர் விடுதலைக் கூட்டணிதனது வன்முறையற்ற போராட்டத்தைத் தொடரும் எனத் தமிழர் விடுதலைக் கூட்டணியின் புதிய பொதுச் செயலாளர் திரு. அ. அமிர்தலிங்கம் கூறியுள்ளார்.

(கூட்டணி மாநாடு குறித்து 'சென்னை இந்து' பத்திரிகை எழுதியுள்ள தலையங்கத்தில் சில பகுதிகள்)

● தந்தை செல்வா நினைவுக் கவிதைப் போட்டியில் முதற் பரிசு பெற்ற கவிதை.

## செல்வாவின் நாமத்தைச் சொல்லச் சொல்ல....!

— ம. விக்ரர் —

பூமியிலே புதுப்பிறவி அமைதி பொங்கும்
பூங்காவிற் பூத்தமலர் யேசு நாதன்
வேதநெறி கடவாத தூய ஞானி
விண்ணோரும் போற்றுமுயர் நீதி வாதி
கோமகனே போலுமெழில் கொண்ட ரூபன்
குணக்குன்றம் மாசற்ற குழந்தை நெஞ்சன்
சேவைமனச் செல்வாவின் நாமஞ் சொல்லச்
சிந்தைசெயல் வாக்கொளிருஞ் செங்கை கூம்பும்

அறநெறிக்கண் அரசியலை அமைத்த காந்தி
அன்பினிலே அனைவரையும் அணைத்த தாதை
நிறைகுடம் போல் அறிவுமணிச் சுரங்கம் நெஞ்சம்
நெகிழாத பகைவர்களும் வணங்கும் நேயன்
நிறமதங்கள் சாதியின பேத மேதும்
நினையாத மனத்தொண்டன் மனைவி மக்கள்
உறவெல்லாந் தமிழ்கண்ட செல்வா நாமம்
உரைப்போர்க்குப் பைந்தமிழ்த்தேன் கசந்தே
போகும்

வட்கிழக்கு மலையகத்துத் தமிழர் வாழ்க்கை
வரலாற்றை ஒருகுடைக்கீழ் வகுத்த தந்தை
தடதடத்த நிலைதனிலுந் தளரா தோடித்
தன்னலமே காணாத கருணை மேகம்
உடலமது துரும்பான போது முண்மை
உறுதியுடன் விரதமிருந் துரிமை காத்தோன்
திடமனைத்தும் பிழிந்தசுவைக் கரும்புச் செல்வன்
திருநாமம் நிதமோதத் தெய்வங் காக்கும்


பாடிநின்ற பாவலர்க்குப் பொன்னை யீந்து
பண்ணிசையைப் பொழிந்தோர்க்குப் பரிசு மீந்து
வாடிநின்ற முல்லைக்குத் தேரை யீந்து
வரலாற்றுப் புகழ்பெற்று வாழ்ந்தோ ருண்டு
தேடிவைத்த செல்வமெலாஞ் சமுதா யத்தின்
தேவைக்காய்ச் சேவைக்காய் இறைத்த வள்ளல்
கோடிதவஞ் செய்தீழத் தமிழர் பெற்ற
குணச்செல்வன் பெயர்சொல்லக் கொட்டும் மேகம்

ஆண்டுபல ஆண்டுகளாய் ஆண்ட சாதி
அடிவருடிப் பழிசுமக்கும் அடிமை வாழ்வு
மாண்டொழிய மூதறிவின் முதிர்ந்த ஞான
மகத்துவத்தாற் புதுப்பாதை படைத்த மேதை
தூண்டுவதோ பிரிவினையை யென்றெதிர்த்தோர்
தூற்றுமொழி ஏற்றுயர்ந்த கொள்கை யாளன்
பாண்டவர்க்குத் தருமனைப்போல் எங்கள் செல்வன்
பாக்கியப்பேர் புகன்றிடப்போர்ப் படையின்
வாங்கும்

குடியரசு படைத்தோம்நாம் சிங்கம் பாயுங்
கொடியின்கீழ்த் தமிழர்களுங் குவிந்து வந்தே
அடிபணிவீர் என்றெழுந்து அரசு கட்டின்
அதிகார விடநாகம் அடங்கும் வண்ணம்
முடியெனவே தமிழ்மக்கள் சூட்டி வைத்த
முதல்வெற்றிப் பதவிதனை உதறி மன்றப்
படியிறங்கிப் புகழ்பொறித்த செல்வா நாமம்
பலகோடி யுரைத்தாலும் பசி தீராது

அரசே நின் ஆட்சியினில் அமைதி இல்லை
அறமில்லை என்சாதி அடிமை யில்லை
முரசறைவேன் உலகறிய முழங்கி நிற்பேன்
முப்படைக்கும் சிறைக்கும் நான் அஞ்சேன் என்று
உரமுடனே சட்டங்கள் உடைத்தெறிந்தோன்
உபவாச மறியல்களில் உவகை பூத்தோன்
பெருவீரத் தளபதியை அமிர்த மாக்கிப்
பெறத்தந்தோன் பெயர்புகல வீரம் பேசும்

ஈழத்தின் செந்தமிழர் உரிமைத் தாகம்
இதயத்தின் நாடியெலாங் குமுறிப் பாய
வேழத்தின் வீரமொடு பசுவின் சாந்தம்
வெற்றிமுடி லட்சியமும் விளைந்து பொங்க
வாழவிடு என்றெழுந்த அறத்தின் செல்வன்
வளர் சீர்த்தி நாமத்தைச் சொல்லச் சொல்ல
மூளுமொரு விடுதலைப் போர் வாகை சூடும்
முத்தமிழ்ப் பொற் கொடிவான முகட்டிற்
கொஞ்சும்




### மாநாட்டில் மலையகப் பிரதிநிதிகள்

ஆவரங்காலில் நடைபெற்ற த.வி.கூ. மாநாட்டில் மலையகத்திலிருந்து இ.தொ. காங்கிரஸ் சார்பில் அதன் பொதுச்செயலாளர் திரு. எம். எஸ். செல்லச்சாமி, துணைப்பொதுச் செயலாளர் சென்னன், தொழிலுறவு அதிகாரி கே.சுப்பையா, வவுனியா மாவட்டப்பிரதிநிதி திரு: மருதப்பிள்ளை ஆகியோர் பங்குபற்றினர்.

இலங்கைத் தொழிலாளர் கழகத்தின் சார்பில், திரு. கெங்கரத்தினம், திரு. கோவிந்தராஜன் ஆகியோர் தலைமையில் 40 பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

### தீண்டாமை ஒழிப்புக்குழு இன்று கூடுகிறது

தமிழீழத்தில் தீண்டாமையொழிப்பு— சாதி வேறுபாட்டு ஒழிப்பு இயக்கத்தை, நடத்துவதற்கென கூட்டணியின் தேசிய மாநாட்டில் நியமிக்கப்பட்ட குழு இன்று ஞாயிற்றுக்கிழமை (6-8-78) மாலை4 மணிக்கு குழுவின் தலைவர் திரு.வி.என். நவரத்தினம் தலைமையில் கூடி தனது திட்டங்களையிட்டு ஆலோசிக்க விருக்கிறது.

### சுதந்திரன் புதிய முகவரி

15, மகாத்மா காந்தி வீதி,
யாழ்ப்பாணம்.

### வரவேற்புக் குழு. நன்றி கூறுகிறது

ஆவரங்கால் மாநாடு வெற்றிகரமாக நடைபெறுவதற்கு பல வகையிலும் உற்சாகமும் உதவியும் அளித்த பொதுமக்களுக்கும், கூடடணிக்கிளைகளுக்கும் மாநாட்டு வரவேற்புக் குழுவினர் துண்டறிக்கையொன்றின் மூலம் தமது நன்றியைத் தெரிவித்திருக்கின்றனர்.

### மாநாட்டில் முஸ்லிம் பிரமுகர்கள்

ஆவரங்காலில் நடைபெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணியின் மாநாட்டில் முஸ்லிம் ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த ஜனுப் சம்சுதீன் கலந்து கொண்டார். அவருடன் கூட்டணியின் புத்தளம் வேட்பாளர் டாக்டர் இல்யாஸ், கல்முனை டாக்டர் உதுமாலெப்பை ஆகியோரும் கலந்து கொண்டனர்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'அமிரின் தலைமையில் நம்பிக்கை வையுங்கள்! அவரது கையைப் பலப்படுத்துங்கள்'

## தமிழ் இளைஞர்களுக்கு இராசதுரை அறிவுரை!



"தமிழினத்தின் தலைவராக விளங்கும் திரு. அமிர்தலிங்கம் அவர்கள் கடந்த 30 ஆண்டுகளாக இந்நாட்டுத் தமிழினத்துக்காக தன்னுடைய வாழ்வையே அர்ப்பணித்து உழைத்துவருபவர்; போராட்டக் களங்கள் பலவற்றைக் கண்டவர்; நெருக்கடி நேரங்களிலெல்லாம் தன் உயிரையே பணயமாக வைத்து தமிழ் மக்களின் நலன்களைப்பாதுகாத்து வருபவர்; இத்தகைய தியாகத் தலைவர் மீது— இலட்சிய வீரர் மீது— பரிபூரண நம்பிக்கை வைத்து தமிழ் இளைஞர்கள் அவர் காட்டுகின்ற பாதையில் கட்டுப்பாட்டுடன் தமிழ் ஈழத்தின் விடுதலைக்கு உழைக்க வேண்டும்!"

மேற்கண்டவாறு தமிழர் விடுதலைக் கூட்டணியின் இரண்டாவது தேசிய மாநாட்டில் 30-7-78ல் கலந்துகொண்டு உரையாற்றிய மட்டுநகர் முதல்வரும் செந்தமிழ்ச் செல்வரும் கூட்டணியின் சிரேட்ட துணைத் தலைவருமான திரு. செ. இராசதுரை முழக்கமிட்டார்.

கூட்டணியின் இலக்கிய மாநாட்டிலும், பொதுக் கூட்டத்திலும் கலந்து கொண்டு உரையாற்றிய திரு. இராசதுரை தமது உரையில் மேலும் குறிப்பிட்டதாவது:

"உலகில் ஏழரைக் கோடி தமிழர்கள் இன்று வாழ்ந்து வந்தபோதிலும், அவர்களுக்கென்றோர் நாடில்லை. உலகில் தமிழனுக்கென்றோர் நாடு இங்குதான் மலரப் போகிறது. தமிழ் ஈழம் அமைப்பதையே நமது முடிந்த முடிபாகக் கொண்டுள்ளோம். ஒரு சுதந்திரத் தமிழ் ஈழத்தை அமைப்பது என்று வட்டுக்கோட்டை மாநாட்டில் இரண்டு ஆண்டுகளுக்கு முன் முடிவெடுத்து, 1977 ஆடிப் பொதுத்தேர்தலில் அதற்கு தமிழ் மக்களின் ஆணையையும் பெற்று, அந்த வழியிலே தமிழர் விடுதலைக் கூட்டணி உழைத்து வருகிறது.

இந்த நேரத்தில் நான் மூன்று விஷயங்களை தமிழ் இளைஞர்களுக்கு நினைவூட்டுகிறேன். முதலாவது அவர்கள் தமிழ்ஈழ இலட்சியத்தில் பூரண நம்பிக்கை வைக்கவேண்டும். இரண்டாவது அந்த இலட்சியத்தை வென்றெடுப்பதற்காக இயங்கி வரும் தமிழினத்தின் ஏகோபித்த இயக்கமான தமிழர் விடுதலைக் கூட்டணி மீது நம்பிக்கை வைக்கவேண்டும். மூன்றாவதாக, கூட்டணியை, இயக்கத்தை வழிநடத்தும் தலைவர் மீது நம்பிக்கை வைக்க வேண்டும்.

இன்று, தந்தை செல்வாவுக்குப் பின்னர் தமிழினத்தை வழிநடத்தும் தலைவர் அமிர்தலிங்கம் ஓர் இலட்சிய வீரர். தந்தை செல்வா, அமரர் வன்னியசிங்கம், திருச்செல்வம் ஜீ.ஜீ. போன்ற தலைவர்களிடம் நெருங்கிப் பழகி அவர்களது அணுகுமுறைகளையெல்லாம் பயின்றவர். களம் பல கண்ட வீரர். 1958ம் ஆண்டுக் கலவரத்தின் போது கூட, மட்டக்களப்பு மக்களின் துயர் துடைத்திட, புகையிரதப் போக்குவரத்தும், வீதிப் போக்குவரத்தும் துண்டிக்கப்பட்ட நிலையிலும், தனது மனைவியுடன் கடல் மார்க்கமாக தனது உயிரையும் திரணமாக மதித்து வள்ளத்தில் வந்தவர். இப்படிப் பல வீரச் செயல்களை நிகழ்த்திய திரு. அமிர்தலிங்கத்தின் தலைமையில் அவரது ஆணைக்குக் கட்டுப் பட்டு, தமிழ் இளைஞர்கள் தமிழ்ஈழத்தின் விடுதலைக்குப் போராட வேண்டும்.

"நான் பாகிஸ்தானைப் பெற்றுத் தருவேன்'' என்று இந்தியத் துணைக்கண்டத்து முஸ்லீம்களுக்கு ஜின்னு உறுதியளித்தார். எப்போது பெறப்போகிறீர்கள், எப்படிப் பெறப்போகிறீர்கள் என்று கேள்வி கேட்காமல் ஜின்னுவின் பின்னல் இந்திய முஸ்லீம்கள் அணிவகுத்து நின்றனர். அவரது கையைப் பலப்படுத்தினர். ஜின்னுவும் பாகிஸ்தானைப் பெற்றுக் கொடுத்தார். அதேபோல தமிழ் இளைஞர்களும் 'தமிழ் ஈழத்தைப் பெற்றுத் தருவேன்' என்று உறுதியளித்திருக்கும் திரு. அமிர்தலிங்கத்தின் மீது நம்பிக்கை வைத்து அவர் காட்டிய பாதையில் கட்டுப்பாடாக முன்னேற வேண்டுமே தவிர, அவநம்பிக்கைப்படவோ, கேள்விகள் கேட்கவோ கூடாது;

இன்றைக்கு இந்த நாட்டிலிருந்து தமிழ் இளைஞர்கள் ஏராளமானோர் வெளிநாடுகளுக்கு உழைப்புக்காக செல்கிறார்கள்; இங்கு நமது தமிழ் ஈழம் சிங்களக் குடியேற்றத்தினால் பறிபோய்க்கொண்டிருக்கிறது. வெளிநாடுகளுக்கு சென்று அங்கு உழைத்துக் கொண்டிருக்கும் ஈழத் தமிழர்கள், என்றோ ஒருநாள் இங்கு திரும்பி வரத்தான் வேண்டிய நிலை ஏற்படும். அப்படி வருகின்ற நிலை ஏற்படும்போது இங்கு அவர்களை ஏற்றுக்கொள்ள நமக்கென்றோர் தாயகம் இருக்க வேண்டும். இதை மறந்துவிடாது வெளிநாடுகளில் வாழுகின்ற ஈழத்தமிழர்கள் தமிழீழத் தாயகத்தின் விடுதலைக்கு தம்மாலான உதவிகளை வழங்க வேண்டும்"

இவ்வாறு திரு. இராசதுரை பேசினார்.

# தமிழ் ஊழியர்களுக்கு கட்டாய சிங்களத் திணிப்பு! சிங்கள ஊழியர்களுக்கு மொழித்தடை இல்லை!

## இது பாரபட்சமா அல்லது தார்மீகமா?

### பண்டிதர் கா. பொ. இரத்தினம்

முந்திய அரசாங்கத்தின் அரசியல் அமைப்பு தமிழ் மக்களின் பிரச்சனைகளைத் தீர்த்து விட்டது. தமிழர்களுக்கு ஒளிமயமான காலம் பிறக்கப்போகிறது. என்று சிறிமா அரசாங்கத்துடன் சேர்ந்து வாழ்ந்த ஓர் அமைச்சரும் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களும் பாடியபல்லவியினையே புதிய அரசியல் அமைப்பினைப் பற்றி அமைச்சர் தேவநாயகம் பாடியுள்ளார். செயவர்த்தன அரசாங்கத்தின் அங்கத்தவரான அவர் வேறெதைச் செய்ய முடியும்?

இந்நாட்டில் பிறந்த ஒவ்வொரு பிரசைக்கும் சம உரிமை. சம அந்தஸ்த்து கிடைக்கும் என்கிறார் அவர். தமிழ் மக்களுக்கு சம உரிமையுமில்லை சம அந்தஸ்துமில்லை. சிங்கள மக்களுடைய தாய் மொழி மட்டும் உத்தியோக மொழியாக்கப்பட்டுத் தமிழ் மக்களின் தாய் மொழியாம் தமிழ் மொழிக்கு அந்த சம உரிமையோ சம அந்தஸ்தோ கொடுக்கப்படாமல் இருக்கும் போது சிங்கள மக்களுக்கும் தமிழ் மக்களுக்கும் சம உரிமை, சம அந்தஸ்து உண்டு என அரசியல் தெளிவற்றவர்கள் தான் கூறுவார்கள்!

சிங்கள அரசாங்க உத்தியோகத்தர்கள் தமிழ் கற்க வேண்டியதில்லை. ஆனல் தமிழ் அரசாங்க உத்தியோகத்தர்கள் சிங்களத்தைக் கற்கவேண்டும்; இல்லாவிடின் அவர்களுக்குப் பதவி உயர்வு, சம்பள உயர்வு, வேலை நிரந்தரம் எதுவும் கிடையாதென வலியுறுத்தும் அரசியல் அமைப்பு தமிழ் மக்களுக்கு எவ்வாறு சம உரிமையையும் அந்தஸ்தையும் கொடுக்கும்?

தமிழ்ப் பகுதிகளில் தமிழ் தெரியாத சிங்கள உத்தியோகத்தர்கள் பலர் அரசாங்க அதிபர்கள் போன்ற அரசாங்க உயர்பதவிகளில் இருக்கிறார்கள். இவர்கள் எப்படித் தமிழ்ப்பகுதிகளில் தமிழில் நிர்வாகத்தை நடத்துவார்கள். புதிய அரசியல் அமைப்பு நிறைவேற்றப்பட்ட உடனேயே இருபத்திநான்கு மணித்தியாலத்துள் இவர்கள் எல்லோரும் மாற்றப்பட்டு இவர்களின் இடங்களுக்கு தமிழ் தெரிந்தவர்கள் நியமிக்கப்படுவார்களா? என்பதற்கு அமைச்சர் மறுமொழி கூறுவாரா?

தமிழ் இந்நாட்டுத் தேசிய இனத்தின் தாய் மொழி. அதனை இப்பொழுது தான் தேசிய மொழியாக ஏற்று அரசியல் அமைப்பில் சேர்க்கிறோம் என்பது தமிழரை அவமதிக்கும் சொல்லாகும். தமிழைத் தேசிய மொழியாக ஏற்றுக் கொள்வதால் தமிழ் மொழிக்கு அரசியல் அமைப்பு எந்த உரிமையை அந்தஸ்தைப் புதிதாகக் கொடுத்துள்ளது என்பதை அமைச்சர் தேவநாயகம் விளக்குவாரா?

தேசிய மொழியாக ஏற்றுக் கொள்ளப்பட்டது என்று கூறுவது அதற்கு உத்தியோக மொழி அந்தஸ்து கொடுக்காமல் விட்ட அநியாயத்தை அதர்மத்தை மூடிமறைப்பதற்கும், எல்லோரும் இரண்டு தேசிய மொழிகளைக் கற்க வேண்டுமென்று கூறிக்கொண்டு சிங்களத்தைத் தமிழரின் தொண்டைக்குள் திணிப்பதற்குச் செய்யும் சூழ்ச்சியைத் தான் புலப்படுத்துகிறது.

தமிழ் அரசாங்க உத்தியோகத்தர் பலர் தமது தாய் மொழியுடன் அந்நிய சிங்கள மொழியில் பயிற்சி பெற்றுப் பரீட்சையில் தோற்றினல் மட்டுமே அரசாங்க அலுவலகங்களிலும் அரசாங்க சார்பான நிறுவனங்களிலும் தொடர்ந்து வேலை செய்யலாம். ஆனல் சிங்கள அரசாங்க உத்தியோகத்தர்கள் தமிழ் மொழியில் தேர்ச்சி பெருமலே வேலை செய்யலாம். இந்த அடிப்படை வேறுபாட்டை அரண் செய்யும் புதிய அரசியலமைப்பு எப்படி இந்நாட்டு மக்கள் எல்லோருக்கும் சம உரிமையையும், சம அந்தஸ்தையும் வழங்குகின்றது?

ஆங்கிலேயர் ஆட்சியின் [illegible]

[illegible] வேண்டுமென வற்புறுத்தப்படாத அரசாங்க உத்தியோகஸ்தர்களையும் சிங்களத்தைக் கற்குமாறு வற்புறுத்தும் பழைய, புதிய சிங்கள ஏகாதிபத்திய அரசுகள் ஆங்கில ஏகாதிபத்தியத்திலும் கொடுமை நிறைந்தனவன்றே. எனவே, புதிய அரசியலமைப்பும் பழைய அரசியலமைப்பைப்போலத் தமிழரை இரண்டாந்தரப் பிரசைகளாக அடிமைகளாகவே ஆக்குகின்றது.

சுருக்கத்திற்காகவும் தெளிவுக்காகவும் இந்த அரசியலமைப்பைப் புதிய அரசியலமைப்பு எனவும் அன்றேல் செயவர்த்தன அரசியலமைப்பு எனவும். முந்திய அரசியலமைப்பைப் பழைய அரசியலமைப்பு எனவும் அன்றேல் சிறீமா அரசியலமைப்பு எனவும் குறிப்பிடலாம். பழைய அரசியலமைப்பில் பதினறு அத்தியாயங்கள் உள. புதிய அரசியலமைப்பில் பத்தொன்பது அத்தியாயங்கள் உள, பழைய அரசியல் அமைப்பில் நூற்று முப்பத்து நாலு உறுப்புரிமைகளும், புதிய அரசியல் அமைப்பில் நூற்றைம்பத்தி ஒன்பது உறுப்புரிமைகளுமுள.

இந்த இரு அரசியல் அமைப்புக்களிலும் அடிப்படைக் கொள்கைகளில் எவ்விதமாற்றமுமில்லை. தமிழ்த் தேசிய இனத்தைப் பாதிக்கும் மொழி, சமயம் எனும் துறைகளில் சிறீமா சென்ற வழியிலேயே செயவர்த்தனவும் அடியொற்றிச் சென்றிருக்கின்றார்.

1 இலங்கைக் குடியரசு ஒற்றை ஆட்சி உடைய அரசாகும்.

2 இலங்கையின் அரசகரும மொழி (உத்தியோக மொழி) சிங்கள மொழியாகும்.

3 புத்த சமயமே அரசியல் சமயமாக ஆக்கப்பட்டுள்ளது.

பழைய அரசியல் அமைப்பில் இல்லாத கட்டுப்பாடுகள் பல புதிய அரசியல் அமைப்பில் புகுத்தப்பட்டுள்ளன. இவற்றிலே பல தமிழ் மக்களையும் அவர்களுடைய தனி அரசுப்போராட்டங்களையும் பெரிதும் பாதிக்கின்றன.

தமிழ் அரசாங்க ஊழியர் சிங்கள மொழியில் பயிற்சி பெற்றிருக்க வேண்டும் என்பது புதிதாக அரசியலமைப்பில் புகுத்தப்பட்டுள்ளது.

புதிய அரசியல் அமைப்பு நிறைவேற்றப்பட்டு நடைமுறைக்கு வந்தபின் இந்த அரசியல் அமைப்புக்கு எதிராக எவரும் பேசுதலோ, கிளர்ச்சி செய்தலோ தடை செய்யப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அக்டோபர் 2-க்கு முன்பு சாதிவேறுபாடுகளுக்கு சாவுமணி அடிக்கப்படும்!

## நவம் தலைமையில் தீண்டாமையொழிப்புக்கு நடவடிக்கை!



அண்ணல் காந்தியடிகளின் பிறந்த தினமான எதிர்வரும் அக்டோபர் 2ம் திகதிக்குள் தமிழீழத்தில் நிலவும் சாதிவேறுபாடுகளுக்கும் தீண்டாமைக் கொடுமைக்கும் சாவு மணி அடிக்கக் கூடிய தீவிர நடவடிக்கைகளில் கூட்டணி இறங்கவிருக்கிறது, இதற்கான தீர்மானம் ஆவரங்காலில் நடைபெற்ற கூட்டணியின் இரண்டாவது தேசிய மாநாட்டில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இச்சமூக சீர்திருத்த நடவடிக்கைகளை திட்டமிட்டு மேற்கொள்வதற்கு சாவகச்சேரி பா. உ. திரு. வி.என். நவரத்தினம் தலைமையில் ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது. இக் குழுவில் திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம், சட்டத்தரணி கனக மனோகரன், இறைகுமாரன், முன்னாள் மாவட்ட நீதிபதி திரு. த. தம்பித்துரை, உடுப்பிட்டி பா. உ. திரு. இராசலிங்கம், சிந்தனைச்சிற்பி சி. கதிரவேற்பிள்ளை ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் மாநாட்டில் திரு. வி. என். நவரத்தினம் அவர்களால் முன் மொழியப்பட்டு, தமிழ் மகளிர் பேரவை செயலாளர் திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கத்தினால் வழி மொழியப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட தீண்டாமை யொழிப்புத் தீர்மானம் வருமாறு:—

"தமிழ் மக்களின் ஒற்றுமையைச் சிதைத்து அவர்களது பண்பாட்டை மாசுபடுத்தும் சாதிஅடிப்படையிலான சமூகக் குறைபாடுகளை ஒழிப்பதற்கு திட்டமிட்டு விரைவுபடுத்தல் இன்றியமையாததாகையால் 1978 செப்ரெம்பர் மாதம் முழுவதையும் சமூகக்குறைபாடுகளை முற்றாக ஒழிக்கும் மாதமாகக் கொண்டு கோயில்கள், உணவுச் சாலைகள், சிகை அலங்கார நிலையங்கள், பொதுக்கிணறுகள் முதலியனவற்றில் இப்பொழுது சாதாரணமாக நிகழும் புறக்கணிப்புக்களையும், உரிமை மறுப்புக்களையும் களைந்தெறிந்து காந்தி பிறந்த அக்டோபர் மாதம் 2ம் திகதி சாதி வேற்றுமைக்குச் சாவுமணி அடித்துவிட்டோம் எனப் பிரகடனப் படுத்துவதற்கு த.வி. கூட்டணி உடனே நடவடிக்கை எடுக்க வேண்டுமென இம் மாநாடு தீர்மானிக்கிறது"

# பழந்தமிழகத்தில் சாதிகள் இருந்ததில்லை! இன ஒற்றுமை வளர சாதியை விரட்டுவோம்!

தலைவரவர்கள் பேசுகிற பொழுது சொன்னார்கள். இஸ்ரேல் மிகப்பழமையான இனத்திலே ஒன்று என்று. அந்த இனம் பேசிய ஈபுரூ மொழிஅடியோடு அழிந்தே போய்விட்டதென்று நினைத்துக் கொண்டிருந்தார்கள். அந்த ஈபுரூ மொழி—அழிந்துபோனமொழியினுடைய சில சொற்களை வைத்துக் கொண்டு அந்த இஸ்ரேலியர் — தங்களுக்குள் பலவாறு பிரிந்து இருந்தவர்கள்—உணர்வு பெற்று நாம் மிகப்பழமையான இனமாயிற்றே. இந்த இனத்தினர் ஏன் பிரிந்து வாழ வேண்டும்? நாம் எதற்காக ஒவ்வொரு நாட்டிலும் போய் கையேந்திக்கொண்டு நிற்க வேண்டும்? நமக்கு என்று ஒரு சிறிய நிலப்பகுதி வேண்டும் இந்த உலகத்திலே நம்முடைய தாய் மொழியை நாம் மதிக்க வேண்டும் என்று ஒரு காலத்திலே உணர்வு பெற்றார்கள். உணர்வு பெற்ற அவர்கள் உலகத்திலே எங்கணுமுள்ள இஸ்ரேலியர்களை ஒன்றாகக் கூட்டினார்கள். அந்த இஸ்ரேலியர் அனைத்துப் பேரும் எந்த வேறுபாடுமில்லாமல் ஒன்றாக இணைந்தார்கள். அவர்களுடைய ஈபுரூ மொழியை மீண்டும் புதுப்பிக்க வேண்டுமென்று உணர்வு கொண்டார்கள். அந்தத் தாய் மொழி உணர்ச்சியினால் அந்த மொழி புதுப்பிக்கப்பெற்றது; மீண்டும் அவர்களுக்கு ஒரு நிலம் கிடைத்தது. அரேபியாவிலே பாலைவனத்திலே ஒரு பகுதி. அந்த நிலத்தை அவர்கள் வைத்துக்கொண்டு இரவு பகலாகப் பாடுபட்டு சிறியவர்களும், பெரியவர்களும், முதியவர்களும், பெண்களும் பாடுபட்டு அந்த நிலத்தை நன்றாகப் பதப்படுத்தி, காடு கொன்று நாடாக்கியது போல் அந்தப் பாலைவனத்தைச்சோலைவனமாகமாற்றி ஒருபெரியநாட்டை அமைத்துக் கொண்டார்கள். இப்பொழுது ஈபுரூ மொழியில் தான் சட்டம் அமைகிறது; அந்த மொழியில் தான் அரசு நடக்கிறது; ஈபுரூ மொழியில்தான் கல்விஅமைகிறது. இந்தஅளவுக்கு அவர்கள் தங்களுடைய தாய் மொழியையும், தாய் நிலத்தையும், அவர்கள் மீண்டும் அந்த இழந்துபோன உரிமையையும் பெற்றுக் கொண்டார்கள்.

நான் எதற்கு இதைச் சொல்கிறேன் என்று சொன்னால் தமிழர்கள். தங்களுக்குள்ளே பலவாறு பிரிவுபட்டுக்கிடக்கிறார்கள். சமயத்தாலும், சாதிகளாலும், கட்சியாலும் பலப்பல வகையான கூறுகளாக, துணைச் சாதிகளாகப் பல சாதிகளாக பிளவுபட்டுக்கிடக்கும் தமிழினத்தை "வாழ்கின்றார் முப்பத்து மூக்கோடி மக்கள் என்றால், சூழ்கின்ற பேதமும் அந்தத் தொகை இருக்கும்" என்று பாவேந்தர் பாரதிதாசன் குறிப்பிடுவார். எவ்வளவு மக்கள் வாழ்கின்றார்களோ, அந்த அளவுக்கு அவர்கள் வேறுபாடற்றவர்களாக இருக்கிறார்கள். எத்தனை சாதிகள்? நினைத்துப் பாருங்கள். இந்தச் சாதியினுடைய தோற்றங்களெல்லாம் பழந்தமிழகத்திலே இருந்ததில்லை. தமிழ் இலக்கியங்களிலே, கிடைத்த சில இலக்கிய நூல்களிலே எந்த வகையான சாதிக்குறிப்பும், ஒரு இழிந்த சாதியையோ, உயர்ந்தசாதியையோ தனித் தனியாகக் குறிப்பிடவில்லை.

புறநானூற்றிலே ஒரேயொரு பாட்டிலே, ஒரு இடத்திலே சாதிக்குறிப்பு வருகிறது. அதாவது "பாணன், பறையன், துடியன், கடம்பன் இந்த நான்கும் அல்லது குடியும் இல்லை" என்று அந்தப் பாட்டிலே வருகிறது. அதுதான் சாதிகளைக் குறிப்பிடுகிற ஒரேயொரு பாடல். அதிலே கூட அந்தச்சாதிகள் இழிவான நிலையிலே குறிப்பிடவில்லை. அந்தத்தொழில் உடையவர்கள் ஒரு ஊரிலே சேர்ந்து இருக்க வேண்டும் என்ற குறிப்புத்தான் அந்தப் பாட்டிலே இருக்கிறது



அவர்கள் குடிமக்கள்; அந்தக் குடிமக்களோடு அவர்கள் தொழிலுடையவர்கள். எனவே அவர்களும் ஒரு குடியிலே, ஒரு நாட்டிலே இடம்பெற வேண்டும் என்கின்ற குறிப்பு அந்தப் பாட்டிலே இருக்கிறது.

ஆனால் இன்றைக்குப் பாருங்கள் எத்தனையோ சாதிகள். தமிழர்கள் தமிழகத்திலிருந்து வெளிநாடுகளுக்குச்செல்கிறவர்கள்கூட அந்த சாதி உணர்ச்சியைத் தவறாது கூடவே எடுத்துக் கொண்டு போகிறார்கள். அவர்கள் அங்கேபோட்டுவிட்டு வரவேண்டிய குப்பைகள் அவை. அந்தக்குப்பைகளைக் கூட மூட்டைகளாகச்சுமந்து தோள்மேல் போட்டுக் கொண்டு வெளிநாடுகளுக்கு போகிறார்கள். சிங்கப்பூர், மலேசியாப் பகுதிகளிலே வாழ்கின்ற தமிழர்கள் வேற்றுநாட்டு மக்களோடு சேர்ந்து வாழ்கின்ற ஒரு வாய்ப்பைப் பெற்றிருந்தும் கூட வேறு மக்களுடைய ஒரு பொதுவான உணர்வை நேரடியாகப்பார்த்துப்பழகியிருந்துங்கூட தங்களுடைய தீமையான அந்த சாதி உணர்வுகளை தவிர்த்துக் கொள்வதற்கு அவர்களுக்கு அறிவு ஏற்படவில்லை. இப்படி இருந்தால் எந்தக்காலத்திலே தமிழன் ஒன்றாக இணைவான்?

எனவேதான் நமக்குத்துன்பம் வருகிறபோது நம் இனத்தை நினைக்கிறோம்! வேறு நிலையில் நாம் நினைத்தவர்களாகத் தெரியவில்லை. அதனால்தானோ என்னவோ தெரியவில்லை. நமக்குத் துன்பம் அடிக்கடி வருகிறது. நாம் அந்த இன உணர்ச்சியைப்பெற வேண்டும் என்பதற்காக இறைவனால் இந்தத்துன்பங்கள் கொடுக்கப்படுகின்றனவோ, என்றுகூட நான் ஒரு சில நேரங்களிலே ஏங்கி வருந்தியிருக்கிறேன். அந்த அளவுக்கு நாம் இவ்வளவு துன்பப்பட்டுங்கூட நமக்கு ஒருவகையான விழிப்புணர்ச்சியை நம்முடைய ஒரு பழமையான வரலாறு உணர்த்தவில்லை என்று சொன்னால் ஒன்றாக நாம் வரலாற்றை மறந்திருக்க வேண்டும். அல்லது தவறான வரலாறு நமக்கு சொல்லப்பட்டிருக்க வேண்டும். இந்த இரண்டு நிலைகளும் தமிழகத்திலே உண்டு.

தமிழர்கள் என்பவர்கள் ஆபிரிக்காக் கண்டத்திலிருந்து வந்தவர்கள் என்று சில புதிய வரலாற்று ஆசிரியர்கள், நூல்கள் எழுதி வைத்திருக்கிறார்கள். இந்த நூல்களை எல்லாம் நாம் முறியடிக்க வேண்டும். உண்மைகள் பலவாறு எடுத்துச் சொல்லப்பட வேண்டும்.

நம்முடைய அரசியல் தலைவர்களை நான் மிகவும் தாழ்மையாக வேண்டிக் கேட்டுக் கொள்வது, மக்களுக்கு அரசியல் அறிவை ஊட்டுகின்றபோது வரலாற்று அறிவையும் சேர்த்து அவர்கள் கொடுக்க வேண்டும். அப்போதுதான் அவர்களுக்கு உள்ளத்திலே ஒரு தென்பு ஏற்படும். அந்தத் தென்பு

**பெருஞ்சித்திரனார் பேருரை-4.**

ஏற்பட்டால்தான் நம்முடைய மக்கள் பழமையான அந்த உரிமையைப் பெறுவதற்கு ஊக்கமுள்ளவர்களாக இருப்பார்கள். எனவே மொழி நிலையிலே, இன நிலையிலே நாம் வீழ்ந்துபட்ட அந்த வரலாற்று நிகழ்ச்சிகளை நீங்கள் நினைத்துக் கொள்ள வேண்டுமென்று தாழ்மையோடு கேட்டுக் கொள்கிறேன்,

— வளரும்

சன்சயின்
சோப்
ஈழம் எங்கும் விற்பனையாகிறது
- இது ஓர் லாலா தயாரிப்பு -
லாலா சோப் தொழிற்சாலை
அச்சுவேலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஒழுங்கு நடவடிக்கைக் குழு

தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஒழுங்கு நடவடிக்கைக் குழுவில் கீழ்க்கண்டோர் அங்கம் வகிக்கின்றனர்.

வி.என்.நவரத்தினம் பா.உ (தலைவர்) பி. எஸ். சூசைதாசன் பா.உ. மாவைசேனாதிராசா, அ.தங்கத்துரை, ச.சுப்பிரமணியம்.

கூட்டணிப் பா.உ.க்கள் பொதுச்சபை, செயற்குழு உறுப்பினர்கள், சாதாரண உறுப்பினர்கள் ஆகியோர் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்க நெறிக்கோவையைத் தயாரிக்கும் பொறுப்பு திரு. க.துரைரத்தினம் பா.உ.ஆகியோரைக்கொண்ட குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது:

பித்தளை பூட்டு
பித்தளை சாமான்கள்
பெயின்ட் வகைகள்
கம்பி வகைகள்
நம்மிடம் சகாயவிலையில்
பெற்றுக்கொள்ளலாம்,
Inthiran Hardware Stores
101, K. K. S. ROAD,
JAFFNA.

## பாராட்டு விழா

தமிழரசுக் கட்சியின் ஆரம்பகால உறுப்பினரும், சிறந்த சமூக சேவையாளருமான திரு.இ. துரைசிங்கம் ஜே.பி, அவர்களுக்கு சேவை நலம் பாராட்டு விழா 5.8.78 சனிக்கிழமை மாலை 5மணிக்கு திருநெல்வேலி கிழக்கு வாலையம்மன் சனசமூக நிலையத்தில் நடைபெறுகிறது. இவ் விழாவில் தமிழர் தலைவர் திரு.அ. அமிர்தலிங்கம், கூட்டணித் தலைவர் திரு.மு. சிவசிதம்பரம், செ. இராசதுரை பா.உ., உட்பட பலர் உரையாற்றுகிறார்கள்.

### சுதந்திரன் சந்தா

| | |
|---|---|
| ஓராண்டுச் சந்தா | ரூ. 50.00 |
| அரை ஆண்டு ,, | ரூ. 25,00 |

## கூட்டணியின் தேர்தல் நியமனக்குழு

தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயற்குழுவினால் தெரிவு செய்யப்பட்டுள்ள தேர்தல் நியமனக் குழு விபரம் வருமாறு:- மு. சிவசிதம்பரம் பா.உ. (தலைவர்) அ. அமிர்தலிங்கம் பா.உ., சி. கதிரவேற்பிள்ளை பா.உ., இராசம்பந்தன் பா.உ., டாக்டர் உதுமா லெப்பை, பொ.வி. கந்தையா, நா.தி. செல்லத்துரை.




மில்க்வைற் நீல சோப்!
மூலப்பொருட்கள் விலையேற்றம், காகித விலை ஏற்றம்—இருந்தும் நாங்கள் சோப் விலையைக் கூட்டவில்லை;
விலை சதம் 60 மட்டுமே!
மில்க்வைற் — யாழ்ப்பாணம்

கிங்ஸ்லி (கொழும்பு) 7-வது வாரம்
முத்துராமன், சுஜாதா —நடித்த,
பேரும் புகழும்

விஜயா (மட்டுநகர்)
சிவாஜி நடித்த—
உத்தமன்
— கலர் —

9-வது வாரம்
கெப்பிட்டல்
கமலஹாசன், ஆலம்—நடித்த
கே. பாலசந்தரின்
மன்மத லீலை
(கலர்)

லிடோ (யாழ்நகர்) கடைசி வாரம்
சிவகுமார், ஹிந்தி நடிகை அலகா,
ஸ்ரீகாந்த், மனோரமா நடித்த-
மதனமாளிகை
(கலர்)

செல்லமகால்
சிவகுமார், ஏ, வி. எம்: ராஜன்,
நாகேஷ், டி. ஆர். பகவதி, புஸ்பலதா,
விஜயலலிதா நடித்த-
பால் குடம்
கதை வசனம்: கிருஷ்ண - பஞ்சு
(புதிய கொப்பி)

கெயிட்டி [கொட்டாஞ்சேனை]
நாகேஷ், டி. எஸ். பாலையா,
கே. ஆர். விஜயா நடித்த-
-ஜெயகாந்தனின்-
யாருக்காக அழுதான்

ரீகல் மட்டுநகர்
பேரும் புகழும்

இப்பத்திரிகைகொழும்பு -12, 194 ஏ, பண்[illegible] பேப்பர்ஸ் லிமிட்டெட் நிறுவனத்தாரால்1978ம் ஆண்டு ஆகஸ்ட் 6-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது; அச்சுப்பதிப்பு: வஸ்தியன் அச்சகம் பிரதான வீதி, யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org